**<u>சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.</u>**

**<u>அ.வ எண்: 231/2024 ஜெயபாலன் (பிசா1) தேதி: 24.03.2026.</u>**

**<u>பிசா. 1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணத்தின் பெயரில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

நான் கோவில்பட்டி நாடார் உறவின்முறை சங்கத்தில் நான் தற்போது செயலாளராக இருந்து வருகிறேன். தாவாப்படும் தேர்தலில் உறவின் முறை சங்க தலைவராக APK பழனிசெல்வம் என்பவர் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றாலும், நான் செயலாளராக தேர்தெடுக்கப்பட்டேன். சாட்சி தானாக முன்வந்து தேர்தலில் வெறறி பெற்ற 65 நபர்கள் சேர்ந்து உறவின்முறை சங்க தலைவரை தேர்ந்தெருப்போம். இதர நிர்வாகிகளை தேர்ந்து எடுக்கப்பட்ட தலைவர் நியமணம் செய்வார். நாடார் உறவின்முறை சங்கத்தின் நிர்வாகிகள் தலைவரையும் சேர்த்து நான்கு பேர் ஆவார்கள். நாடார் உறவின்முறை சங்கத்தில் 8 நபர்கள் நிர்வாக குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்படுவார்கள். நாடார் உறவின்முறை சங்கத்தில் நிர்வாகிகள் என நான் கூறுவது தலைவர், உபதலைவர், செயலாளர், பொருளாளர் ஆகும். கோவில்பட்டி நாடார் உறவின்முறை சங்கத்திற்கு தூத்துக்குடி மாவட்டத்தின் சொத்துக்கள் உள்ளன என்றாலும், இதர மாவட்டங்களில் சொத்துக்கள் இல்லை என்றாலும் சரிதான். கோவில்பட்டி நாடார் உறவின்முறை சங்கத்திற்கு சொந்தமாக மேற்படி சொத்துக்களை நிர்வாகம் செய்வது மேற்படி தேர்ந்தெடுக்கப்பட்ட 65 நபர்கள் என்றால் சரிதான். தாவாப்படும் தேர்தலில் மேற்படி தேர்ந்தெடுக்கப்பட்ட 65 நபர்களும் யானைச் சின்னத்தில் போட்டியிட்டோம் என்றால் சரிதான்.

தாவாப்படும் தேர்தலில் மேற்படி 65 நபர்களும் யானைச் சின்னத்தில் ஒரு குழுவாக இருந்து போட்டியிட்டோம் என்றால் சரிதான். அந்த தேர்தலில் யானைச் சின்னம் தவிர மீண் சின்னத்தில் ஒரு குழு போட்டியிட்டது. தாவாப்படும் தேர்தலில் வாக்குசீட்டில் யானை, மீண் சின்னம் தவரி வேறு சின்னம் இருந்ததா என்றால் இல்லை. யானைச் சின்னத்தில் போட்டியிட்ட 65 நபர்களும் தேர்தலில் வெற்றிப்பெற்றோம் என்றால் சரிதான். மீண் சின்னத்தில் எத்தனை பேர் போட்யிட்டார்கள் என்றால் எனக்கு நியாபகம் இல்லை,. ஆனால் மீண் சின்னத்தில் போட்டியிட்ட யாரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. இந்த வழக்கில் கண்ட 67 பிரதிவாதிகளில் ஒருவர் இறந்துவிட்டதால் இதர பிரதிவாதிகளுக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன். இதர பிரதிவாதிகள் என்னை அவர்கள் சார்பாக வழக்கை பார்த்துக்கொள்ளும்படி கூறியதன்பெயரில் நான் வழக்கை பார்த்து வருகிறேன். இந்த வழக்கில் கண்ட 67 பிரதிவாதிகளும் எனக்கு தெரியும். கோவில்பட்டி நாடார் உறவின்முறை சங்கத்தில் நான் முதன் முதலில் 2008 வருடம் தேர்தலில் வெற்றிப்பெற்று நிர்வாககுழு உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டேன். அன்று முதல் இன்று வரை சங்கத்தின் வெவ்வேறு பொருப்பில் இருந்து வருகிறேன். APK பழனிச்செல்வம் என்பவரும் என்னைப் போல் 2008 வருடம் தேர்தலில் தான் வெற்றி பெற்று நிர்வாக குழு உறுப்பினராக தேர்தெடுக்கப்பட்டார் என்றால் இல்லை. அவர் தோராயமாக 2004 ம் வருடத்தில் இருந்து சங்கத்தில் பொருப்புகளில் இருந்து வந்தார். நான் சங்க பொதுக்குழுவில் 1986 முதல் உறுப்பினராக இருந்து வருகிறேன். அதன்படி சங்கத்தின் துனை விதிகள், நடைமுறை எனக்கு நன்கு தெரியும் என்றால் ஒரளவு தெரியும். சங்கத்தின் செயல்பாடு தீர்மானங்கள் மூலம்

நிறைவேற்றப்படுகிறது என்றால் சரிதான். தீர்மானம் என்பது பொதுக்குழுவில் நிறைவேற்றப்படும் நிர்வாககுழுவில் தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படாது. நிர்வாககுழு மாதத்திற்கு ஒரு முறை கூடும், துனை விதிகளின்படி ஒவ்வொரு மாதமும் 15 தேதி நிர்வாககுழு நடைபெற வேண்டும். ஆனால் நடைமுறையில் அந்த மாதத்திற்குள் நிர்வாககுழு நடைபெறும். சங்க பொதுக்குழு வருடத்திற்கு ஒரு முறை கூடும். பொதுவாக ஒவ்வொறு வருடமும் ஆகஸ்ட் மாதம் பொதுக்குழு கூடும். சங்க நிர்வாகக்குழு சங்க கட்டிடத்தின் மாடியில் உள்ள மீட்டிங் காளில் நடைபெறும். சங்க பொதுக்குழு கூட்டம் முன்பு நாடார் நடுநிலைப்பள்ளியில் நடந்து வந்தது. கடந்த 10 முதல் 15 வருடங்களாக பசுவந்தனை சாலையில் உள்ள காமராஜன் அரங்கத்தில் பொதுக்குழு நடந்து வருகிறது. கடந்த 10 வருடங்களில் சங்க சிறப்பு பொதுக்குழு கூட்டம் கூடியுள்ளதா என்றால் கூடியுள்ளது. ஒரு முறை மட்டுமே அவ்வாறு சிறப்பு பொதுக்குழு கூடியுள்ளது. அந்த சிறப்பு பொதுக்குழு எந்தவருடம், மாதம், தேதியில் கூடியது என்ற விபரம் எனக்கு நியாபகம் இல்லை. சிறப்பு பொதுக்குழு கூடுவதற்கு என்ன காரணம் மற்றும் அதில் என்ன பொருள் சம்மந்தமாக விவாதிக்கப்பட்டது என்றால் எனக்கு நியாபகம் இல்லை. அந்த சிநப்பு பொதுக்குழுவில் நானும் கலந்துகொண்டேன். உறவின் முறை சங்கத்தின் பொதுக்குழு உறுப்பினர்கள் என்னிக்கை எவ்வளவு என்றால் சரியாக தெரியவில்லை. ஆனால் தோராயமாக 2800 உறுப்பினர்கள் இருக்கலாம். தாவாப்படும் தேர்தலின்போது வாக்களிக்க தகுதியான உறுப்பினர்கள் என்னிக்கை எவ்வளவு என்றால் என்னிக்கை எனக்கு தெரியவில்லை. நான் கூறும் சிறப்பு பொதுக்குழுவில் எத்தனை சதவிதம் பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள் என்றால் சுமார்

350 முதல் 400 உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். சரியான என்னிக்கை எனக்கு தெரியவில்லை. மேற்படி சிறப்பு பொதுக்குழுவில் சங்க துனை விதிகளை சீர்திருத்தம் செய்ய ஏதாவது விவாதம் நடைபெற்றதா என்றால் இல்லை.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:** வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது..

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.